KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஜனவரி - மார்ச் 2014 காலாண்டிதழ் இதழ் - 1

ரூபா 80
இறுவெட்டுடன்
ரூபா 100

## வாழ்வின் வலுவாய் வலு



## நம்பிக்கை வைப்போம்

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்

வெளியீடு
கருவி
மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையம்


ஆசீர் வணிக நிலையம்
ආසීර් වණි නිලෛයම්
Paper / Stationeries / More Items
ASEER
Vaniga
Nilaiyam
AVN Technologies
No.202, 204, K.K.S Road, Jaffna.
T.P : 021 222 5485 Fax : 021 222 2842


ARUMUGAM TEXTILES
Whole Sale & Retail
Dealers In
Textiles & Fancy Goods
# 20, Grand Bazaar
Jaffna
Tp . 0212222740

KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

இதழ் 01

# வலு

ஜனவரி - மார்ச் 2014

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களினையும்
ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**

**பிரதம ஆசிரியர்**

திரு க. தர்மசேகரம்

**ஆசிரியர் குழு**

திரு நா. கீதாகிருஸ்ணன்

திரு செ. பிரிந்தாபரன்

திரு இ. தனஞ்சயன்

திரு யோ. சுதாகரன்

திரு து. சற்குணராசா

செல்வி அ. பவளறஞ்சனி

வெளியீடு
கருவி
மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையம்
இல 90, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...

1. வாழ்வின் வலுவாய் வலு ........................ 02

2. வாழ்த்துச் செய்திகள் ............................. 03

3. மாற்றுவலுவும் தொழில் வலுவும் .......... 05

4. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் ... 08

5. எழுதுங்கள் வெல்லுங்கள் ........................ 11

6. எண்ணக் கிண்ணம்.............................. 13

7. வலிகளை உரமாக்கி எழுந்த
உலக விருட்சங்கள் .................................... 16

8. முற்றத்து மல்லிகை .................................. 21

9. சிறுகதை ................................................ 25

10. செய்திச் சாளரம் ....................................... 29

11. வலுவிடம் கேளுங்கள்...! ........................ 31

# வாழ்வின் வலுவாய் வலு

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!

நீண்டகாலம் மனச்சிறகினுள் காத்திருந்த குஞ்சு இன்று சிறகு விரிக்கிறது. வலு என்கின்ற இச் சஞ்சிகையினூடாக உங்களோடு இணைவதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

மாற்று திறனாளிகள் என்ற மகுடத்தில் தங்களை மலர்த்த விரும்பும் சமூக மாந்தர்களின் ஆக்கங்களையும் **விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்காக** பணியாற்றுகின்ற நிறுவனங்கள் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்களையும் தாங்கி காலாண்டு இதழாக வலு எனும் இச் சஞ்சிகை கருவி மாற்று திறனாளிகளின் சமூக வள நிலையத்தினூடாக வெளி வருகின்றது.

அங்கக்குறைபாடுகளோடு வாழ்கின்ற மனிதர்களின் ஆரோக்கியமான இருத்தலுக்கான சாத்தியப்பாடுகளை முன்நிறுத்தியதாக வலுவில் வெளிவரும் ஆக்கங்கள் அமைந்திருக்கும்.

இயந்திரமயமாக மாறிவிட்டிருக்கின்ற இந்த உலகில் நிதானிப்பு இன்னமும் இருக்கின்றது. என்ற வலுவான நம்பிக்கையோடு உங்கள் கரங்களில் வலுவை நாம் தவழ விடுகின்றோம். சஞ்சிகை வரலாற்றில் புதிய பரிநாமத்தை வலு நிச்சயமாக ஏற்படுத்தும். இச் சஞ்சிகை இறுவெட்டாகவும் வெளிவருகின்ற சிறப்பைக் கொண்டிருக்கின்றது. என்பதையும் மிகுந்த மனநிறைவோடு வெளிப்படுத்தி நிற்கின்றோம். கருவி மாற்று திறனாளிகளின் சமூக வள நிலையம் எமது சமூகத்திற்கு வழங்கும் வலுவான சமூகப் பணியாகவே வலுவின் வெளிவருகையை நாம் காண்கின்றோம். வலு சஞ்சிகைக்கு வலுச்சேர்க்கும், வளம் சேர்க்கும் கருத்துக்களையும் ஆக்கங்களையும் உங்களிடம் நாம் நாடி நிற்கின்றோம்.

நன்றி

வலு ஆசிரியர்
க. தர்மசேகரம்

மாற்றுத் திறனாளிகள் சமூக அபிவிருத்தியில் பங்கெடுத்தல் என்பது ஒரு எண்ணக்கருவாக மட்டுமன்றி நடைமுறைச் சாத்தியமான விடயமாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாறிவரும் உலக எழுச்சிக்கு அமையவும் அங்க இழப்புக்கள் அல்லது அங்கக் குறைபாடு உடையோரது திறன்களுக்கு ஏற்பவும் செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படல் வேண்டும். மாற்றுத் திறனாளிகள் சமூக அபிவிருத்தியில் பங்கெடுப்பது என்பதை இரு நிலைப்பட்ட அணுகுமுறைகள் ஊடாக சாத்தியமாக்க முடியும். சமூக மட்டத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்ற அதே வேளை சமூகத்திற்கான பங்களிப்புக்களை தாமும் நல்க முடியும் என்கின்ற மனப்பாங்கை மாற்றுத்திறனாளிகளும் அதிகளவில் விருத்தி செய்து கொள்ள வேண்டும். அப்போது தான் மேற்குறித்த எண்ணக்கரு அடைதற்குரியதாக அமையும்.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone } 021-222 2235

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone } 021-222 2233
021-222 2234

ෆැක්ස්
பக்ஸ்
Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

| මගේ අංකය<br>எனது எண்<br>My No. | Message from GA | ඔබේ අංකය<br>உமது எண்<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 28.10.2013 |
|---|---|---|---|---|---|

# வாழ்த்துச் செய்தி

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தினால் வெளியிடப்பட உள்ள "வலு" காலாண்டு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தில் இலைமறை காயாய் ஒதுங்கி நின்ற மாற்றுத் திறனாளிகளை இனங்கண்டு அவர்களது விருப்பிற்கும், தெரிவிற்கும் ஏற்ப சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பங்குபற்றுவதற்கான வலுவினைப் பெற்றுக் கொடுப்பதும், தனிமைப்பட்டு இரண்டாம் தரப் பிரஜைகளாய் கணிக்கப்படுவதாக அவர்களிடமிருந்த உணர்வினை அகற்றி நிறைவாய் வாழ்வோம் எனும் நம்பிக்கையை ஊட்டி அவர்களை வாழ்விப்பதே இந் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும். இந் நிறுவனப்படுத்தலின் மூலம் சமூகத்தின் கவனம் அவர்கள்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டு அவர்களுக்கு எம்மாலானதைச் செய்ய வேண்டும் எனும் உணர்வினை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது.

மாற்றுத்திறனாளிகள் என்றில்லாது ஏனையோரைப் போன்று சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ வைத்து அவர்களுடைய வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும் ஒப்புயர்வற்ற சேவையில் ஈடுபட்டுவரும் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் பணி அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இந் நிலையத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் செயற்பாடுகள் மென்மேலும் வளர்ந்து சிறந்து பரந்து பயன்தர எமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் தம்மாலான ஒத்துழைப்பை நல்கி அவர்களது வாழ்வை ஒளிமயமாக்கிடவும் இவர்கள் பற்றிய ஆக்கங்கள் தகவல்களைத் தாங்கி வெளிவரவுள்ள "வலு" சஞ்சிகைக்கு எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்

## அங்கவீனமுற்றோருக்கானதேசிய சபை உறுப்பினரின்

# வாழ்த்துச்செய்தி

மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு செயலொழுங்கு என்பது எப்போதுமே பல்லின பரிமாணங்களைக் கொண்டது என்றே காணப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக அத்திறனாளிகளை நேரடியாகவே சென்றுஎட்டும் புனர் வாழ்வு அனுகூலங்கள் அவர்களை நேரடியற்ற இலக்குக் குழுக்களாக கொண்டு சமூக அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாப்பதும் முன்னேற்று விப்பதும் என்ற இரு முதன்மை பரிமாணங்கள் எப்போதுமே இருந்துவந்துள்ளன.

சமூகவிழிப்புணர்வு என்ற அணுகுமுறையைப் பொறுத்தவரை மாற்றுத்திறனாளிகளுக்காக பரிந்து பேசுதலும் ஆதரவு திரட்டுதலும் ஒருபுறம் இருக்க மறு புறத்தில் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து காட்சிப்படுத்துவதன் மூலம் சமூக அங்கீகாரத்தைப் பெறுதல் பிறிதோர் அணுகு முறையாக இருக்கின்றது.

கருவி நிறுவனம் பிரசவிக்கும் வலு என்னும் இக்காலாண்டு சஞ்சிகை சமூகவிழிப்புணர்விற்கான மேற்போந்த இரு அணுகு முறைகளையும் பரீட்சித்து பார்க்கும் ஒரு பாலமாக பரிணமித்து இருப்பது அவதானிற்கப் பாலது. இத்தகைய சஞ்சிகை மாற்றுத்திறனாளிகளுக்காக பரிந்துபேசும் ஆக்கங்களையும் மாற்றுத்திறனாளிகளின் திறமையை காட்டும் ஆக்கங்களையும் தாங்கும் வண்ணம் வடிவமைத்திருப்பது சாலச்சிறந்தது. அந்தவகையில் இம் முயற்சியில் களமிறங்கியுள்ள கருவி நிறுவனமும் திரு.தர்மசேகரம் போன்ற அதன் முகாமைத்துவ அணியினரும் ஐயமின்றி பாராட்டுதலுக்குரியவர்கள். இவர்களின் முயற்சி மாற்றுத்திறனாளிகளால் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டும்.

வளர்வதோடு இப்பணி வாழ்ந்திடவும் வேண்டும் பல ஆண்டுகள் என வாழ்த்துவதில் நான் பேருவகை.கொள்கின்றேன்.

வளர்க இப்பணி வாழ்க எஞ்ஞாண்டும்

நன்றி

**திரு.வெ.சுப்ரமணியம்**
**அங்கவீனமுற்றோருக்கான தேசிய சபை உறுப்பினர்**
**சமூகசேவைகள் அமைச்சு**
**பத்தரமுல்ல**

# மாற்றுவலுவும் தொழில் வலுவும்



மாற்றுத்திறனாளிகள் நோய், விபத்து, பிறப்புக் குறைபாடுகள், உள்நாட்டு கலவரங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் உருவாகி வருகின்றார்கள்.

இவர்களில் யாருமே எந்த ஒரு வலுவிழப்பையும் விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை.

இவ்வாறு வலுவிழந்த நபர்களை வீடுகளுக்குள் முடக்கிவைத்து அவர்களின் தேவைகளை, உரிமைகளை, உணர்வுகளை புரிந்துகொள்ளாத நிலையே முன்பு காணப்பட்டது.

"பிறப்பிலிருந்தோ அல்லாமலோ உடல் அல்லது உள ஆற்றல்களில் ஒருவருக்கு ஏதாவது குறைபாடு உள்ளமையால் வாழ்க்கையின் அத்தியாவசிய செயல்களைத் தாம் செய்வதை உறுதிப்படுத்த முடியாத நிலையே வலது குறைவு எனப்படும்".



வலது குறைவு தொடர்பாக வைத்திய மற்றும் சமுக பொருளாதார அம்சங்களை உள்ளடக்கிய பரந்த அளவிலான வரைவிலக்கணம் இதுவாகும். இவ்வாறு வலுவிழந்தோர் தொடர்பான கொள்கை கூறுகின்றது.

இன்று மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்கள் பல்வேறு துறைகளிலும் சாதித்துவருகின்றார்கள்.

முன்னேற்றங்கள் ஒரு புறம் ஏற்பட்டாலும் இன்னொரு புறம் பல மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்களில் பெருமளவினர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவருகின்றனர்.

சாதாரணமானவர்கள் சில தொழில் செய்து நாளாந்த வருமானத்தைக் கூட்டி வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றார்கள். ஆனால் இவர்களோடு ஒப்பிடும்பொழுது மாற்றுவலுவுடையோர்கள் தங்களால்

முடிந்த கிடைத்த வலுவுடன் சிறியவருமானத்தையே ஈட்டமுடிகிறது.

மாற்றுவலுவுடையோருக்கு தொழில் வழங்குவதற்கு என பல லட்சம் பெறுமதியான திட்டங்கள் (Project) மூலம் தொழில் சந்தை, தொழில் வாய்ப்பு என்ற அடிப்படையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆனால் அவர்களின் தொழில் திருப்திகரமானதாக அமையவில்லை.

இலாப நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டுள்ள சில தனியார் தொழில் வழங்குநர்கள் ஆளணி குறைபாடுகளைத் தீர்க்கவும், குறைந்த ஊதியத்தில் நிறைந்த இலாபமெடுப்பதற்குமாகவே மாற்றுவலுவுடையோர்களுக்கு நியமனங்கள் வழங்கிவருகின்றனர். அதுவும் பொருத்தமில்லாத வேலைகளை வழங்குவதனால் தனியார் துறைகளில் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற முடிவதில்லை. இருந்தபோதிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தமான தொழில் வழங்கிவரும் ஒரு சில நிறுவனங்கள் பாராட்டுக்குரியதே.

**வலதுகுறைந்தோருக்கான சேவை வழங்கும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்**

1990ம் ஆண்டின் 28ம் இலக்க அங்கவீனமுற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் 20ம் பிரிவின் கீழ் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனங்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

வலுவிழந்த நபர்களைப் பாதுகாப்பதற்கென பதிவுசெய்யப்பட்டு அவர்களுக்குச் சேவை வழங்கும் பல நிறுவனங்கள் இருந்தபோதும் குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி நிலை உத்தியோகங்களையும் பொருத்தமான உத்தியோகங்களையும் வழங்கியும் ஊக்கிவித்தும் வருகின்றன. இத்தகைய நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள், விதவைகள், மற்றும் ஆதரவற்றோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை வழங்குவது மிகவும் தேவையானதொரு விடயமாகும். வசதி படைத்தவர்களுக்கும் உடல் வலுவுள்ளோருக்கும் தொழில் வழங்குவதன் மூலம் இந் நிறுவனங்களின் நோக்கம் வெற்றிபெறாது.

மாற்றுத்திறனாளிகளின் அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்படும் நிதி பெருமளவில் நிறுவனங்களின் உள்ளக பராமரிப்புக்கே செலவிடப்படுவதனால் மாற்றுத்திறனாளிகள் அடையும் பலன் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

அதவேளை பத்திரிகைகளில் வெளிவரும் வேலைவாய்ப்பு விளம்பரங்களில் பெரும்பாலும் ஆரோக்கிமானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கமுடியும். என்று குறிப்பிடப்படுகிறது. மாற்றுவலுவுடையோரை ஊக்குவிக்கும் அல்லது உள்வாங்கும் எந்தவிதமான விடயங்களும் குறிப்பிடப்படுவதில்லை. இதனால் மாற்றுத்திறனாளர்கள் விண்ணப்பிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது.

ஒரு நாட்டில் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்ற வறுமை, வலுவிழப்பு போன்றன காணப்படுமானால் அந்த நாடு பூரணத்துவமான அபிவிருத்தியை அடைய முடியாமல் போய்விடும்.

மாற்றுத்திறனாளிகளின் தகுதி, தரம், அனுபவம் என்பவைகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் வாழ்கின்ற பிரதேச எல்லைக்குட்பட்ட பிரதேச சபை, பிரதேச செயலகம் உட்பட்ட ஏனைய அரச திணைக்களங்களில் சாதாரண வேலைவாய்ப்புக்களையாவது வழங்குவதற்கு முன்வருவதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் தொழில் பிரச்சினையை ஓரளவேனும் தீர்க்கமுடியும்.

சர்வதேச அளவில் மாற்றுவலுவுடையோர்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் அவர்களின் முழுமையான பங்களிப்பை வலியுறுத்தி சட்ட ரீதியான உரிமைகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதில் சமூகத்தின் பங்கு பெரிய அளவில் உள்ளது. ஆனால் சமூகம் இதுதொடர்பில் அக்கறை எடுப்பதில்லை.

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக மறுமலர்ச்சியினை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு இன்றைய சமூகத்தின் கட்டாய பொறுப்பாகும். ஒரு சமூகத்தின் சீரான வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவமான வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதாகும். ஆரோக்கியமான சூழலைக் கட்டியெழுப்பவேண்டிய சமூகத்தின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தவேண்டும்.

சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டை வலியுறுத்துவது இன்றைய தேவையாக உள்ளது. கல்வி, பொருளாதாரம், தொழில், சுயதொழில் போன்ற பல்வேறு நிலைகளிலும் மாற்றுவலுவுடையோர்கள் சமூகத்துடன் இணைந்து வாழ்கின்ற வகையில் மாற்றம் ஏற்படவேண்டும்.

மாற்றுவலுவுடையோர்களின் பிரச்சினைகளைக் புரிந்துகொண்டு எதிர்கால சமூக முன்னேற்றம் சமத்துவ வாழ்வு என்பவைகளை கருத்தில் எடுத்து மாற்றுவலுவுடையோர்கள் வாழ்க்கை மேம்பட அனைவரும் ஒன்றிணைந்து சமூக மாதிரியினை மேம்படுத்தவேண்டும்.

மாற்றுவலுவுடையோர்களின் அபிவிருத்திக்கு மாற்றுத்திறனாளிகள் அவர்களின் நிறுவனங்கள் மூலம் சமூகத்துடன் இணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தால் நிச்சயமாக வெற்றி கொள்ளலாம்.

-திரு.செ.பிரிந்தாபரன்

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் - டிசம்பர் - 3

உலகில் வாழும் மக்கள் சகல உரிமைகளோடும் கௌரவத்தோடும் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்ற எண்ணக்கருவை முன்நிறுத்தும் வகையில் ஐக்கியநாடுகள் சபை சில தினங்களை பிரகடனப்படுத்தி உள்ளது. இத் தினங்கள் ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வரும் தினங்களுள் மகளிர் தினம், சூழல் பாதுகாப்பு தினம், முதியோர் தினம், சிறுவர் தினம், மது ஒழிப்பு தினம் ஆகியன சிலவாகும். குறிப்பிட்ட அத் தினங்களில் குறித்த அவ் விடயத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தி உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இத் தினங்களை கொண்டாடுவதன் நோக்கமாகும். இந்த வகையில் அமைந்ததே சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமும் ஆகும்.



உலக சனத்தொகையில் சுமார் 15 வீதமானவர்கள் ஏதோ ஒரு வகையில் - உள ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள் என மதிப்பீடுகள் கூறுகின்றன. அதாவது உலகத்தின் மிகப்பெரிய "சிறுபான்மையினர்" என்ற வரையறையில் இவர்கள் உள்ளனர். சமூகத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் இவர்களுக்கு தடைகள் காணப்படுகின்றன. இவர்கள் எதிர்நோக்கும் இடையூறுகளாக வாழுமிடத்தின் தன்மைகள், அவர்களுடன் ஏனையவர்கள் ஏற்படுத்தும் தொடர்புகள், சில நாடுகளின் சட்ட திட்டங்கள், சமூகத்தின் மனோபாவம், பாரபட்சம் போன்றவற்றை குறிப்பிடலாம். இதன் பெறுபேறு யாதெனில் இப் பெரிய சிறுபான்மையினர் கல்வி, வேலைவாய்ப்பு, உடலாரோக்கியம் மற்றும் சுகாதார கவனிப்பு, போக்குவரத்து, அரசியல், நீதிநிலை ஆகியவற்றில் சமபங்காளிகளாக இல்லாதிருப்பதாகும்.

ஆனால், இந்தத் தடைகள் நீக்கப்பட்டு முழுமையாக சமுதாயத்துடன் இவர்கள் இணைக்கப்பட்டு அவர்களிடமுள்ள திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களை உலகத்தின் பங்காளர்களாக மாற்றுவதனால் அவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்த சமூகமும் ஏன் நாடும் வளர்ச்சி கண்டுள்ளமையை பல நாடுகளின் அனுபவங்களும் நடைமுறைகளும்

எடுத்துக்காட்டுகின்றன. எனவே, இத்தகைய இடையூறுகள், தடைகள் இவர்களுக்கு இருக்கும் எனின், அது நிச்சயமாக அவர்கள் சேர்ந்த சமூகத்திற்கும் அபிவிருத்திக்கும் ஊறுவிளைவிப்பதாகவே அமையும். எமக்கு அல்லது எமது குடும்பத்தில் ஒருவருக்கு இந்நிலை ஏற்படுமாயின் வாழ்நாள் முழுவதும் இன்னொருவரில் தங்கி இருக்க நேரிடும். இந் நிலையினை மாற்றி அறிவு பூர்வமாக சிந்தித்தால் இன்றைய உலக வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் என்று சொல்வதற்கு சிறிய சிறுபான்மையினரே இருப்பர்.

உலகில் வாழும் மாற்றுத்திறனாளிகள் சாதாரண மனிதர்களைப்போல் சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு முதன் முதலாக **1981**ம் ஆண்டை "சர்வதேச மாற்றுதிறனாளிகள் ஆண்டு" என ஐ.நா. பிரகடனம் செய்தது. இதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து நாட்டு அரசாங்கங்களும் வழிவகைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐ.நா வேண்டுகோள் விடுத்தது. இதற்கென **1983** முதல் **1992** வரை ஐ.நா ஒரு தசாப்த காலத்தை மாற்றுத்திறனாளின் விருத்தி செயற்பாடுகளுக்காக ஒதுக்கி பணிகளை ஒருமுகப்படுத்தியது. இத் தசாப்தம் முடிவுக்கு வர இருக்கும் நிலையில் **1992**ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் **14**ம் திகதி ஐ.நா. பொதுச்சபையால் டிசம்பர் மாதம் **3**ம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அத்துடன் அதே ஆண்டான **1992** டிசம்பர் **3**ம் திகதி ஐ.நா. சபையாலும் ஏனைய உலக நாடுகளாலும் மாற்றுத்திறனாளிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் ஐ.நா. வின் பிரகடனம் இத்தினத்தை "International Day of Disable Persons" என்றே குறிப்பிட்டது. எனினும் இது **2007** டிசம்பர் **18**ம் திகதியன்று "International Day of Persons with Disabilities" என மாற்றப்பட்டது. ஏனெனில் அறிவியல் வளர்ச்சி காரணமாக, மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வின் துணைக்கருவிகளும் முன்னேற்றம் பெற்றன. இந்நிலையில் உள்ள மக்களும் ஏனையவர்களைப் போல சகல விடயங்களையும் செய்யக்கூடிய நிலை காணப்பட்டமையாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இம்மக்களின் வாழ்க்கை முறையை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. "Disable" என்ற பதம் நிரந்தரமாக இயலாத தன்மையைக் குறிப்பதாகும். ஆனால் இது வெல்லப்படக்கூடிய ஒன்று என உணரப்பட்டபோது இந்தப்பதமும் மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. "Disability" என்பது குறிப்பிட்ட சில விடயங்களைச் செய்வதற்குப் பயிற்சியின்மை என்ற கருத்தை ஏற்படுத்தியது. விசேட தேவை உடையோர், மாற்றுத்திறனாளிகள்

போன்ற பதங்களை பயன்படுத்துவது தொடர்பான வாதப் பிரதி வாதங்கள் இன்று இடம் பெற்று வருகின்றன.

ஐ.நா. சபை மாற்றுத்திறனாளிகள் சம்பந்தப்பட்டவரை, அவர்கள் அனைத்து விடயங்களிலும் சமூகத்தில் சம நிலையில் உள்ளவர்கள் எனவும் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார வைத்திய கவனிப்பு என்பவை போன்ற அனைத்திற்கும் அவர்களுக்கான இடம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனைத்து நாடுகளிலும் இது சம்பந்தமான சட்டமுறைகள் பேணப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது.

இப்படியிருந்தும் உலகின் பல பகுதிகளில் இதுபற்றிய அறிவு, தெளிவு மற்றும் விழிப்புணர்வு என்பன இல்லாமல் அலட்சியப்படுத்தப்பட்டு வருவதை காணலாம். இந் நிலையினை தொடர விடாது உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்றுத்திறனாளிகளும் சாதாரண மனிதர்களை போல் சகல உரிமைகளுடனும் வாழ உலக மாந்தர்களும் அரசுகளும் வழி வகைகளை செய்ய முன் வர வேண்டும்.

இவ்வாறான விடயங்களின் வெற்றிக்கு டிசம்பர் 3 மாற்றுத்திறனாளிகள் தினம் வழிகாட்ட வேண்டும்.

- குருமுனி

## “கருவி” யின் செயலாளரின் உள்ளத்திலிருந்து...


கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் “வலு” என்ற இச் சஞ்சிகையை வெளியிடுவதன் மூலம் முக்கியமான மைல் கல் ஒன்றினை நிறுவுவதாகவே நாம் நம்புகின்றோம். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான ஆரோக்கியமான புரிதலை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு வலு தனது வலுவான பங்களிப்பை வழங்கட்டும். எழுத்துரு வாசிப்பென்பது இலத்திரனியல் ஊடகங்களின் வருகையோடு குறைந்து வருகிறதோ என்ற அச்சத்தையும் தாண்டிய நம்பிக்கையோடு வலு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தால் வெளியிடப்படுகின்றது. மாற்றுத்திறனாளிகளுக்காக பணி செய்கின்ற நிறுவனங்களினதும் சமூக ஆர்வலர்களினதும் கருத்து வெளிப்பாட்டிற்கான சிறந்த களத்தை வலு நிச்சயமாக வழங்கும். கருவியின் சமூகப்பணிப் பயணத்தில் வலு சஞ்சிகையின் வெளியீடு பெறுகின்ற முக்கியத்துவம் காலத்தின் தேவையாகவே உணரப்படுகிறது. வலு வளம் பெற எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வேண்டிநிற்கின்றோம்.

**து.ஜசிந்தன்.**
**செயலாளர்,**
**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்.**

**போட்டி இல. 01**

# எழுதுங்கள் வெல்லுங்கள்

## வினாக்கள்



*01.* *டிசம்பர் 03 மாற்றுத்திறனாளிகள் தினமாக எத்தனையாம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது?*

*02.* *செவிப்புலன் அற்றோர் தொடர்பு கொள்ள பயன்படுத்தும் பிரதான ஊடகம் யாது?*

*03.* *சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?*

*04.* *மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றும் சர்வதேச விளையாட்டுப்போட்டி யாது?*

*05.* *இலங்கையில் செயற்கை அவயவங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் பெயரினை குறிப்பிடுக?*

*06.* *மகாபாரத வரலாற்றுக்கதையில் இடம் பெறும் பார்வையற்ற அரசனின் பெயர் யாது?*

*07.* *தற்போது இலங்கையில் உள்ள ஒரு மாகாண சபை அமைச்சர் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியிலிருந்து தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றார் அவர் யார்?*

*08.* *ஒரு காலை இழந்த போதும் தீவிர முயற்சியால் நடனக் கலைஞராகி உலகப் புகழ் பெற்ற தமிழ்ப் பெண்மணி யார்?*

*09.* *தொலைபேசியை கண்டு பிடித்த அலெக்ஸாண்டர் கிரகம்பெல் எவ்வகையான அங்கக்குறைபாடு உடையவர்?*

*10.* *பரா ஒலிம்பிக் போட்டிகளில் சாதனை படைத்த பார்வையற்ற வீராங்கனை ஒருவருக்கு 2000 ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் சட்ட ரீதியாக பங்கு பெற அனுமதி வழங்கப்பட்டது. அவ் வீராங்கனை யார்?*

---

இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள்

இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

விடைகளை 28.02.2014 க்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

சரியான விடைகளை எழுதும் வெற்றியாளர்களுக்கு முதல் மூன்று பரிசில்களும் 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

✂ விடைகள்

போட்டி இல. 01

# எழுதுங்கள் வெல்லுங்கள்

01. ..................................................................................................................

02. ..................................................................................................................

03. ..................................................................................................................

04. ..................................................................................................................

05. ..................................................................................................................

06. ..................................................................................................................

07. ..................................................................................................................

08. ..................................................................................................................

09. ..................................................................................................................


10. ..................................................................................................................

- முழுப்பெயர் : ..............................................................
- தபால் முகவரி: ..........................................................
- தொலைபேசி இலக்கம்: ................................................
- பிறந்த ஆண்டு, மாதம், திகதி: ......................................

*அனுப்ப வேண்டிய முகவரி*

**எழுதுங்கள் வெல்லுங்கள்**
கருவி,
மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையம்,
இல 90 செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

# எண்ணக் கிண்ணம்



## வாஞ்சையுடன்

மாற்று வலுவுள்ளவர் நாம்
வாழ்வதற்காய் துடிக்கின்றோம்
மாறிவரும் உலகில் நல்
மாற்றத்தை விரும்புகின்றோம்.

விழியில்லை ஆனாலும்
விடியலுக்காய் முயலுகின்றோம்.
வாய் மொழி இல்லை என்றாலும்
வேறுவழியில் பேசுகின்றோம்.

காலியங்க மறுத்தாலும்
நாற்காலியில் நாம் இயங்குகின்றோம்.
கையுடைந்து போனாலும்
நம்பி "கை"யுடனே வாழுகின்றோம்.

எங்கள் உள்ளத்து உணர்வுகளை
தரணிக்கு உயர்த்திடவே,
மாற்றுத்திறனாளிகள் நாம்
இத்தினத்தை வாஞ்சையுடன்
கொண்டாடுகின்றோம்.

மகேந்திரம் (அச்சுவேலி)

## பலம்

சத்தங்கள் எம்மை சிந்திக்க வைக்கும்
வெண்கோல் எமக்கு வழிகாட்டும்
பாரினில்நாங்கள் பார்வை இழந்தோம்
உறவுகளே எமக்கு கை கொடுங்கள்
வெளிவர குமுறிடும் எரிமலை போல
இவர் மன நிலை அறிந்திட இதயமும் உண்டு
பாறைக்குள்ளும் நீரிருக்கும்
பக்குவமாய் தானிருக்கும்
பக்க பலம் நீங்கள் என்றால்
பாறைக்குள்ளும் நாங்கள் நீர் எடுப்போம்

வி.விஜயலாதன்
கோண்டாவில்

# விலகும் மனமே நீ விளங்கிக் கொள்

இமைகள் தேடியும் காணாத கனவுகள்
கால்கள் இருந்தும் சேராத பயணங்கள்
கைகள் இருந்தும் வரையாத சித்திரங்கள்
வாயிருந்தும் பேசாத வார்த்தைகள் -
இவையனைத்தும்
ஊனம் என்று உழறுகின்ற மாந்தரிடம்
உள்ளம் இல்லை என்பதை
விலகும் மனமே நீ விளங்கிக் கொள்

நீ நடக்க பாதை இல்லை என்று
பாரினில் நீ பதை பதைத்துப் போகாதே
நீ நடந்தால் அதுவே ஓர் பாதையாகும்
மாலையில் மரணம் என்று தெரிந்தும் கூட
காலையில் கண்ணீர் விடுவதில்லையே மலர்கள்..

விடியவில்லை என்று விடியலை நீ நோகாதே
விதையாக மண்ணில் வீழ்ந்தவை தானே
விருட்சமாய் உருவானது.
தோல்விகள் உனக்கு சோதனை அல்ல
சாதனைதான் உன் சரித்திரம் பேசும்
விலகும் மனமே நீ விளங்கிக் கொள்

கண்ணில்லை என்று கலங்காதே
அறிவுக் கண்ணால் அகலக் கால் பதி
அகிலமே உன்னைக் கண்டு அதிசயித்துப் போகும்
கால் இல்லை உனக்கென்று கவலை
- கொள்ளாதே
காவியம் படைக்குமாற்றல் உன் மனதினில் உண்டு

வாய் இல்லை என்று வாழ்க்கையை நோகாதே
வரலாறு காண உன்னிடம் வைராக்கியம் உண்டு
கையில்லை என்று நீ கரை ஒதுங்கிப் போகாதே
காலத்தின் கைகளில் நீ காவியம் படைப்பாய்

சுழல்கின்ற பூமியிலே சூட்சுமங்கள் பல உண்டு
கண்ட பின்னர் எல்லோரும் காலம் போற்றும்
- ஞானிகள் தான்
விடியும் என்று விண்ணை நம்ப உன்னால்
முடியும் என்று உன்னை நம்ப
முட்புதரும் உனக்கு பஞ்சு மெத்தை
செந்தணலும் உனக்கு செங்கரும்ப
விலகும் மனமே நீ விளங்கிக் கொள்

கஜேந்தினி.ம
கோப்பாய்

# வாழ்க நின் பணி

- பவளரஞ்சினி
அச்சுவேலி

இரவு விடிந்தது கூட தெரியாமல்
இருளோடு வாழும் மனிதர்களும் உண்டு
வானைப் பிழக்கும் சத்தத்தைக் கூட
கேட்க முடியாமல் பரிதவிக்கும் மானிடரும் பலர் உண்டு
தாம் கண்ட கனவுகளைக் கூட கூறமுடியாமல்
குமுறும் உள்ளங்களும் இங்குண்டு
சக்கர நாற்காலியும் கை ஊன்று கோலும்
தஞ்சமென வாழ்வோரும் பலருண்டு
இத்தனை இதயங்களுக்குள்ளும் ஒழிந்திருக்கும்
திறமைகள் ஏராளம் ஏராளம்
அத்தனை திறமைகளையும் தனித்தனியே இனங்கண்டு
தன்னலமற்ற சேவையினை வழங்கும்
மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்
சோர்ந்திருந்த இதயங்களின் உணர்வுகளை தட்டி
ஒளிவிளக்கேற்றி மறுவாழ்வு வழங்கி வரும்
இந் நிறுவனத்தின் மகிமைதனை
வடித்திட வார்த்தையில்லை
இருந்தாலும் எத்தனையோ உள்ளங்கள் இன்னும்
எங்கள் கரம் எட்டாமலே உள்ளது
அத்தனை உள்ளங்களையும் இனங் கண்டு
தன்னகத்தே உள்வாங்கி வாழ்க்கையுடன் போராடும்
மானிடர்க்கு வழிகாட்ட வேண்டுமென்று
மங்கை நான் விரும்புகின்றேன்
மாற்று வலுவுள்ளோரின் உணர்வுகளை தட்டி எழுப்பி
உங்களாலும் வாழ முடியும் என்ற எண்ணத்தை உருவாக்கி
இலைமறை காயாக ஒழிந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தி
பலர் வாழ்வில் விடிவெள்ளியாய் திகழ்ந்து
மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை மாற்றியமைத்து
மறுவாழ்வு வழங்கி வரும் “கருவி”
மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையமே!
என்றும் உன் பணி தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

# வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

# "நம்பிக்-கை வைப்போம்"

நம்பிக்கை என்னும் சொல் இல்லையெனில் இன்று நாம் காணும் பல கலை மற்றும் விஞ்ஞான அறிவியலைக் கண்டிருக்க மாட்டோம் என்பதோடு பல மனித வெற்றிகளை அனுபவித்து மகிழும் நிலையை இவ்வுலகம் இழந்திருக்கும். ஆனால் நம்பிக்கையைப் பற்றிப் பேசினாலே சிலருக்கு, அதிலும் குறிப்பாக துன்பத்திலிப்பவருக்குப் பிடிப்பதில்லை. ஒரு விடயத்தை நாம் மறக்கக்கூடாது. அதாவது எமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ எத்தனையோ விடயங்களில் நம்மையறியாமலே நாம் சிலவற்றைக் கடைப்பிடிக்கிறோம் என்பதே உண்மை! "நாளைப்பொழுதில் நாமிருப்பது உண்மையில்லை" என்று போதிப்பவர்கூட நாளைப்பொழுதில் இருப்போம் என்ற நம்பிக்கையை இழப்பதில்லை. பொருள் வாங்கக் கொடுத்த ஒரு சிறுதொகைப் பணத்திற்கு மீதிப்பணம் தருவான் என்று இடைப்பட்ட நேரத்தில் சில்லறைக் கடைக்காரன் பேரில் வைக்கும் நம்பிக்கையை இயல்பாகக்கொண்ட மனிதஇனம், கருவிலே சிதையாமல் உருவிலே குறையாமல் பிறக்கும் என் குழந்தை என்ற தாய்மார்களின் நம்பிக்கையை எண்ணிப்பார்ப்பது மிகக் குறைவே. இப்படி நாம் நம்பிக்கை பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். இந்த நம்பிக்கை என்பதன் உண்மையான பலத்தை நாம் அறிவதற்காகவும், சில சாதாரண மக்களால் இன்றைய அறிவியல் முதிர்ச்சிக் காலத்திலும் மாற்றுத்திறனாளர்கள் பற்றி அறியாமை கொண்டிருப்போர்கள் அதனை விலக்கிவிடவும் அவ்வகுப்பைச் சேர்ந்தவர்களால் நிருபிக்கப்பட்டிருக்கும் அவர்களின் வெற்றிப் பயணங்களை நாம் சிறிது நோக்குவோம்.



"வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்று போனால் இன்னொன்று வரும்! அந்த நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது"

இப்படிக் கூறியவர் யாரோ ஒரு தத்துவாசிரியர் அல்ல, பிறந்து தன் ஒன்றரை வயதிலேயே பெயர் தெரியாத நோயினால் தாக்கப்பட்டதன் காரணமாக கட்புலனையும் செவிப்புலனையும் இழந்துவிட்டதோடு பேச்சுத்திறனையும் இழந்துவிட்ட

உலகத்தின் எட்டாவது அதிசயம் என வர்ணிக்கப்பட்ட "ஹெலன் கெல்லர்" என்ற பெண்மணியாவார். இவ்வாறு ஒரு வாசகத்தைச் சொல்லும் அளவிற்கு இற்றைக்குச் சுமார் 130 ஆண்டுக்கு முன் பிறந்த அப்பெண் அறிவியல் வளர்ச்சி பெறாத அக்காலத்தில் கற்றுத் தேறியமை தன்னம்பிக்கையின் பலத்தைக் காட்டவில்லையா? இப் பெண்மணியின் வாழ்க்கை வரலாற்றை நாம் எண்ணிப் பார்ப்பது சாலப் பொருந்தும்.

1880 யூன் மாதம் 27ம் திகதியன்று அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தின் டஸ்கம்பியா நகரத்தில் (Tuscumbia City in Alabama) பிறந்தவர் இந்த ஹெலன் அடம்ஸ் கெல்லர் ஆகும். இவரின் தந்தை ஓய்வுபெற்ற இராணுவ கப்டனாக இருந்து பின் உள்ளூர் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரானவர். தாயாரோ கற்றறிந்த ஒரு பெண்ணாவார். பிள்ளையின் அழகிலும் வனப்பிலும் பெருமைகொண்டிருந்த பெற்றோரின் மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை. ஹெலனின் வயது பத்தொன்பது மாதங்களாக மட்டும் இருந்தபொழுது இனந்தெரியாத நோய் அவளைத் தாக்கியது. (Scarlet fever or Meningitis) இதன்பெறுபேற்றால் இவளின் கண்பார்வை மட்டுமல்லாது கேட்கும் திறனும் அற்றுப்போனது. குழந்தையாக இருந்த இவள் பேசக்கற்றுக் கொள்ளவில்லை என்பதால் பேச்சுத்திறனும் பெற்றிட வாய்ப்பில்லை. நோயின் தாக்கத்தினால் பேச்சு அங்கத்தில் உடல் ரீதியான பாதிப்பும் ஏற்பட்டிருக்கலாம். இப்படி மனித இனத்திற்கு முக்கிய தேவையென நினைக்கப்பட்ட புலன்கள் செயலற்ற நிலையில் அவளில் மனிதம் செத்துவிட்டிருக்க ஜீவன் மட்டும் உடலோடு ஒட்டியிருந்தது. தன் உணர்வுகளை எள்ளளவும் புரியவைக்க முடியாத இருண்ட உலகத்தில் ஒரு குழந்தை எப்படி இருக்கும், நினைத்துப்பாருங்கள்.

இயற்கையாகவே அரிய புத்திக்கூர்மை வாய்க்கப்பெற்றமையால் தன்னைச் சுற்றி நடப்பவைகளை அறிய முனைந்தாள். அவளின் தொடர்பாடல் சைகைகளாகவே அமைந்திருந்தன எனினும் அங்கிருந்தவர்கள் தம்மிடையே வாய்மூலமாகத் தொடர்புகொண்டமையை உணரத்தொடங்கியபோது தன்னால் அதில் கலந்துகொள்ள முடியாமையையிட்டு ஆவேசமும் ஆத்திரமும் கொண்டாள். குழந்தைதானே! பின்னைய நாட்களில் தனது சுயசரிதையில் ஹெலன் இதனைக் குறிப்பிடுகையில், " இந்த ஆத்திரமான எழுச்சி நாளாந்தம் ஏற்பட்டது, சில வேளைகளில் நாள் முழுவதும் ஏற்பட்டது என்பதால் ஏதோ ஒரு வகையிலான தொடர்பாடல் முறை அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்பட்டது." என்கிறார்.

அவளின் ஆறாவது வயதில் ஏற்பட்டது மிகவும் முக்கியமான மாற்றமாகும். அப்பொழுதுதான் ஆன் ஸல்லிவன் (Anne Sullivan) என்ற ஆசிரியை அவளுக்குக் கிடைத்தார். பேர்க்கின்ஸ் பார்வையற்றவர்களுக்கான பாடசாலை அதிபர் இந்த வேலைக்குச் சரியான ஆள் இவர்தான் என்று மிகவும் தைரியம் படைத்த ஸல்லிவனை நியமித்தார். ஏனெனில் அப்பிள்ளைகள் முதலில் முரண்டு பிடிப்பார்கள், ஒத்துப்போக மறுப்பார்கள். இது ஹெலனின்

விடயத்தில் மிகச்சரியாக இருந்தது. அவர் தனது ஆசிரியையான ஸல்லிவனை அடித்து, பலமாகக் கிள்ளி, உதைத்தது மட்டுமல்ல அவரின் ஒரு பல்லையே உடைத்துவிட்டிருக்கிறார். ஆனால் ஸல்லிவன் மிகப் பொறுமையாக அவளின் திறமைகளை எடைபோட்டு அதற்கேற்ப கற்பிக்கத் தொடங்கினார். ஸல்லிவனைப் பொறுத்தவரை அவரும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியவரே. கண்களில் பாதிப்புடன் இருந்து பின் பலதடவைகள் செய்த சத்திர சிகிச்சையின் பின் ஓரளவு பார்வைத் திறன் பெற்றவர்தான் அவர். பார்க்கவோ, காதினால் கேட்கவோ ஏன் பேசவோ முடியாத அப் பிள்ளையை உலகம் போற்றுமளவிற்கு அவர் கொண்டுவந்துள்ளார் என்பதோடு அதற்கேற்ப ஹெலனும் நடந்துள்ளார் என்பதும் உண்மையே. ஆரம்பத்தில் சற்று முரண்பட்ட ஹெலன் கெல்லரை வழிப்படுத்தியதோடு பின்னர் ஐம்பது ஆண்டுக்காலம் கெலன் கெல்லருக்கு இணைபிரியாத நண்பராகவும் அந்த ஆசிரியர் இருந்திருக்கின்றார். ஆன் ஸல்லிவனின் மரணமே பிரிவுக்குக் காரணமாயிற்று. ஆன் ஸல்லிவன் ஆசிரியராக வந்த **1987** ம் ஆண்டின் மார்ச் 3ம் திகதியைப் பற்றிக் குறிப்பிடும்போது "எனது ஆத்மாவின் பிறந்த நாள்" ("My Soul's Birthday") என்கிறார் ஹெலன் கெல்லர்.

அறியாப் பருவத்திலேயே பாதிப்புக்குள்ளானதால் சகல விடயங்களையும் அறிய வைக்க வேண்டும். அதற்கு முதலில் தொடர்பாடல் முறையொன்று தேவை என்ற வகையில் கற்பிக்கத் தொடங்கினார். அவர் போதித்த முறை சொல்லி மாளாது. அவர் ஹெலனின் கையில் ஒரு பொம்மையைக் கொடுத்து அதனை அவர் ஆராய்ந்து பார்க்க விட்டுப் பின் அவரின் உள்ளங்கையில் "Doll" என எழுதிக் காட்ட, ஹெலனும் பிசகாமல் அதே வரிசையில் எழுதிக் காட்டினார். ஆனால் அச்சொல் பொம்மையைக் குறிப்பதையோ ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு அர்த்தம் உண்டு என்பதையோ முதலில் அவரால் அறிய முடியவில்லை. ஆயினும் இது ஒரு விளையாட்டுப்போல தொடர்ந்து அவரை மகிழ்வூட்டியது. காலவோட்டத்தில் மாற்றம் வரவே செய்தது. ஒருநாள் தோட்டத்தில் உலவுகையில் குழாயைத் திறந்து ஹெலனின் கையில் நீரைப் பாயச் செய்து மறுகையில் "water" என்று மீண்டும் மீண்டும் எழுதிக் காட்டினார். தண்ணீரின் வேகத்திற்கேற்ப மெதுவாகவும் விரைவாகவும் எழுதிக்காட்டினார். அப்பொழுதுதான் அந்த முக்கிய அதிசயம் நிகழ்ந்தது. முதன்முதலாக சொற்களுக்கும் பொருட்களுக்கும் உள்ள ஒற்றுமை புரிந்து சட்டென்று தரையைத் தட்டிக்காட்டி அதற்குரிய சொல்லைக் கேட்டார். இருவருக்கும் இருந்த மகிழ்ச்சி உற்சாகத்தில் அன்று மட்டும் சுமார் முப்பது வார்த்தைகளை அர்த்தத்துடன் விளங்கிக்கொண்டார் ஹெலன்!

இப்படித் தொடங்கிய கல்விப்பயிற்சி "பிறெயில்" வடிவங்களைக் கற்றுணரும் நிலை மற்றும் அவருக்குப் பேசுவதிலும் ஆர்வம் ஏற்பட்டபோது அவருக்கு வயது பத்து. அதற்காக சாரா ஃபுல்லர் எனும் சிறப்பு ஆசிரியை நியமிக்கப்பட்டு அந்தச் சவாலை எதிர்கொண்டனர். பேசுபவரின் உதடுகளைத் தன் கைகளால் தொட்டுணர்ந்து பேசிப்பழகினார்.

ஆரம்பத்தில் ஆசிரியைக்கு மட்டுமே புரிந்த அவரின் பேச்சு கடும் பயிற்சிக்குப் பின் கரகரத்த குரலாக இருந்தாலும் அது வெளிப்படுத்திய கருத்துக்களோ மிக ஆழமானவையாக இவ்வுலகில் பரவியது.

*1888* ம் ஆண்டில் இவரை ஆசிரியை ஸல்லிவன் பார்வையற்றோருக்கான பேர்க்கின்ஸ் பாடசாலையில் சேர்த்து மற்றப்பிள்ளைகளுடன் ஒன்றாய் கல்விபயில வைத்தார். அவர் பிரெஞ்ச். கணிதம், புவியியல் உட்பட வேறு பாடங்களையும் பயின்றார். நூலகத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டார். அவரின் அறிவைத் தேட வேண்டும் என்ற அவா அவ்வாறு செய்ய வைத்தது. சிறு வயதில் “பாடசாலை செல்வேன்“ என்று வைராக்கியம் கொண்ட அவர் அதற்கு உண்மையான வடிவம் கொடுத்தார். அரும்பொருட்காட்சிச் சாலையிலும் நேரத்தைச் செலவிட்டார். பேர்க்கின்ஸ் பாடசாலையில் அவர் தனது தன்மானத்தின் திடத்தன்மையை நிலைநாட்ட நடந்த ஒரு நிகழ்ச்சி அவரின் தன்னம்பிக்கை எப்படிப்பட்டது என்பதை எமக்குணர்த்தும். *1891*ல் பேர்க்கின்ஸ் நிறுவனத் தலைவரின் பிறந்தநாளை வாழ்த்தி “The Frost King” என்ற கதையை எழுதிக்கொடுத்தார். அவரும் அதை பாடசாலை இதழில் பிரசுரித்துவிட்டார். ஆனால் அக்கதை ஏற்கனவே வெளிவந்த ஒரு கதையின் தழுவல் எனப் புகார் தெரிவிக்கப்பட்டபோது பதினொருவயதே நிரம்பிய ஹெலன் மிக மனவேதனைப்பட்டார். *1892* இல் பேர்க்கின்ஸை விட்டு வெளியேறிய ஹெலனும் அவரது ஆசிரியையான ஆன் ஸல்லிவனும் பின்னர் அங்கு திரும்பிச் செல்லவில்லை. ஆனால் பல வழிகளிலும் புகழ்பெற்ற ஹெலன் இவ் பேர்க்கின்ஸ் நூலகத்திற்கு ஏராளமான பிறெயில் எழுத்துப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்ததும், கெல்லர்-ஸல்லிவன் என்ற பேர்கொண்ட கட்டடத்தை கட்புலசெவிப்புல நடவடிக்கைகளுக்காக அன்பளிப்புச் செய்ததும் முன் நடந்த அந்தச் சம்பவத்தை அவர் மன்னித்துவிட்டதாகவே நாம் கருதவேண்டும்.

பேர்க்கின்ஸை விட்டு விலகியிருந்தாலும் அவரின் ஆர்வம் குறையாத மனோதிடம், பலமான தன்நம்பிக்கை அவரை கேம்பிரிட்ஜ் பெண்கள் பாடசாலை, றெட்கிளிஃப் பல்கலைக்கழகம் (Redcliffe College) புகக்கூடியதான கல்வியை கற்க வைத்தது. அதில் வெற்றிபெற்ற ஹெலன் கெல்லர் *1904*ம் ஆண்டில் உலகின் கட்புல செவிப்புல இழப்பாளர்களில் முதலாவது பட்டதாரி என்ற பெயர் பெற்றார். இது அவர் தனக்காக மட்டும் செய்யவில்லை. உலகில் அனைத்து மனிதர்களும் ஒரே விதமாக வாழ முடியும் என எடுத்துக் காட்டுவதற்காகவும் செய்தார் என்பது அவரின் சுய சரிதையைப் படிப்பவர்களுக்கு விளங்கும். ஹாவார்ட் பல்கலைக்கழகம் முதன்முதலாக பெண்களுக்கு வழங்கிய கௌரவ பட்டத்தையும் பெற்ற பெருமை இவரையே சாரும். இது தவிர, கிளாஸ்கோ, ஸ்கொட்லாந்து, டெல்லி., பேர்லின், ஜொகனஸ்பேர்க் பல்கலைக் கழகங்களும் இவருக்குக் கௌரவ பட்டங்களை

வழங்கியிருந்தமை இவர் உலகளவில் எப்படியான அளவிற்குப் பெருமைகொண்டவர் என்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அவரது எழுத்தார்வம் ஐம்பது ஆண்டுகளையும் கடந்தது. 1903ல் அவரெழுதிய "என் வாழ்க்கைக் கதை" பெண்கள் சஞ்சிகையொன்றில் தொடராக வெளிவந்து பின் புத்தகமாய் பதிக்கப்பட்டபோது பெற்ற வரவேற்பினால், உலகின் ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டது. இது தவிர, தன்னம்பிக்கை ஒரு கட்டுரை, நான் வாழும் உலகம், கற்சுவரின் கீதம், இருளிலிருந்து, என் மதம், மாலைக்காலத்து அமைதி, நம்பிக்கை கொள்வோம், ஆன் சல்லிவன் மேஸி என் ஆசிரியை, திறந்த கதவு போன்ற எழுத்துக்களும் புகழ் பெற்றவை. அவரின் எழுத்துலகம் பற்றி எழுதுவதற்கு தனியான ஒரு கட்டுரை எழுத வேண்டும். அந்த அளவிற்கு பார்வையின்மை, காதுகேளாமை, சமூகவியல், சமூகம்சார்ந்த பிரச்சனைகள், பெண்ணுரிமை எனப் பல பிரிவுகளில் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதியுள்ளார். இது தவிர, சிறந்த ஒரு பேச்சாளராகவும் விளங்கியவர். பல நாடுகளுக்கு தன் ஆசிரியையுடன் சென்ற இவர் உலகின் ஐந்து கண்டங்களிலும் கால் பதித்த பெருமை கொண்டவர்.

ஹெலன் கெல்லர் வாழ்நாளில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல சாதனை விருதுகளைப் பெற்றவராயினும் அவற்றுள் அவர் உயர்வாக மதிக்கும் ஒரு விடயம் எதுவெனில் தான் சந்தித்த பெரிய மனிதர்களின் அறிமுகத்தையும் நட்பையும் ஆகும்.

அவர் தன்னிலை மறவாதவர், முன்னிலை அறிந்தவர் என்பதோடு பின்னிலை உணர்ந்தவர் என்றே சொல்லவேண்டும். எதிர்காலத்தில் இந்நிலை உள்ளவர்கள் வாழவேண்டும், அதற்குத் தன்னாலானதைச் செய்யவேண்டும் என்று தனக்கு வந்த அனைத்து உதவிகளையும் பரிசுகளையும் நிதியம் நிறுவி அதன்மூலம் வேண்டுவோருக்கு உதவி செய்தார்.

"இந்த இருண்ட அமைதியான என் வாழ்வை கடவுள் ஏதோவொரு திட்டத்தோடுதான் படைத்திருக்கின்றார். அதை என்றாவது ஒரு நாள் நான் உணர்வேன். அப்போது நான் அது குறித்து மகிழ்வேன்"

உள்ளிருக்கும் ஆத்மாவின் ஓயாத அழுகுரல்கள் சாதிக்கவேண்டும் என்ற தன்னம்பிக்கையை, அந்த வெறியை எமக்குள் ஊட்டட்டும். அவை எம்மை தன்னம்பிக்கை மிகுந்த மனிதர்களாக ஆக்கட்டும். எம் சமுதாயம் உலகை அசைக்கும் ஆற்றல் கொண்ட சமுதாயமாக மாறட்டும்.

இந்த மாபெரும் மங்கையின் வாழ்க்கை, மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமல்ல, மனம் சோர்ந்த யாவருக்கும் ஒரு மாமருந்தாகும். வாழ்வின் உன்னதம் உணரச் செய்த இந்த அற்புத பெண்மணியான ஹெலன் கெல்லரின் செயற்கரிய செயலை மனதிலேகொண்டு நம்பிக்கை வைப்போம் நல்வாழ்வினை உருவாக்குவோம்.

**திருநெல்வேலி –சதானந்தசர்மா.**

# முற்றத்து மல்லிகை

## சொர்ணலிங்கம் தருமதன்



காலைப் பொழுதின் சுகத்தை அனுபவித்த படியே கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலைய அலுவலகத்தில் முக்கியமான அந்த மனிதரை சந்திக்க போகின்றேன் என்ற ஆவலோடு காத்திருக்கின்றேன். எனது காத்திருப்புக்கு அவகாசம் பெருமளவு இருக்கவில்லை. சற்று நேரத்திலேயே சொர்ணலிங்கம் தருமதன் அவரது தந்தையாரோடு அலுவலகத்திற்கு வந்தார். ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டபடி அவரது நேர்காணலை வலுவின் முற்றத்து மல்லிகைப் பகுதிக்காக பதிவாக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ள விளைகிறேன். அமைதியான சுபாவம் இவருக்குள் இத்தனை திறன்கள் இருக்கின்றதா என்கின்ற ஆச்சரியத்தை எனக்குள் புதைத்துக் கொண்டவனாய் அவரோடு நான் பேசத் தொடங்கினேன்.

வணக்கம் சொர்ணலிங்கம் தருமதன்! வலுவின் முற்றத்து மல்லிகைப் பகுதிக்காக உங்களைச் சந்திப்பதில் நாம் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறோம்.

வணக்கம்!

**கேள்வி1** :- உங்களைப் பற்றி சுருக்கமாக சொல்லுங்கள்

பதில் :-நான் 1992 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ம் திகதி கோண்டாவிலில் பிறந்தேன். எனது தந்தை ஓய்வு பெற்ற அதிபர், தயார் திருமதி செர்ணலிங்கம் தேவராணி

**கேள்வி 2** :- பார்வைப் புலப் பாதிப்பு ஏற்பட்டமை பற்றி சொல்லுங்கள்

பதில் :-எனக்கு 8 வயதாக இருக்கும் போது ஒரு காய்ச்சல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து எனது பார்வை படிப்படியாக குறையத் தொடங்கியது. மருந்து ஒவ்வாமை காரணமாகவே பார்வைப் புலப் பாதிப்பு ஏற்பட்டதாக வைத்திய பரிசோதனை முடிவுகளில் இருந்து தெரிய வந்தது.

**கேள்வி 3** :-பார்வை இழப்பு நேர்ந்த போது உங்கள் மன நிலை பற்றி சொல்லுங்கள்.

பதில் :-இனி என்ன செய்வது என்று தெரியாத குழப்ப நிலை என் மனதில் காணப்பட்டது. எனினும் எப்படியாவது கல்வியைக் கற்க வேண்டும் என்ற எண்ணமும் என் மனதில் இருந்தது. பார்வைப் புலப் பாதிப்பு படிப்படியாக ஏற்பட்டதாலோ என்னவோ அப் பிரச்சினையை எதிர் கொள்வதற்கான தயார் நிலையை படிப்படியாக நான் எய்திக் கொண்டேன் என்றே சொல்ல வேண்டும்.

**கேள்வி 4:-** பார்வைப் புலப் பாதிப்பு ஏற்பட்டதன் பின்னர் கற்றல் செயற்பாடுகளுக்குள் எவ்வாறு நுழைந்தீர்கள்.

பதில் :- 2002ம் ஆண்டில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபராக இருந்த செல்வி பா. மார்க்கண்டு அவர்கள் தொடர்ந்து கல்வியைக் கற்பிக்குமாறு தந்தைக்கு ஆலோசனை வழங்கிய அதே வேளை தெல்லிப்பளை தந்தை செல்வா பாடசாலை அதிபராக இருந்த எனது தந்தையை வாழ்வக அன்னை செல்வி சின்னத்தம்பி அன்லக்சுமி அம்மையார் சந்தித்து வாழ்வகத்தில் இணைத்து கல்வி கற்பிக்கலாம் எனக் கூறினார் இவற்றின் பயனாக 2004ல் யூனியன் கல்லூரியில் இணைந்து ஆண்டு 6 இல் பிரெய்ல் மூலம் எனது கல்வியைத் தொடரத் தொடங்கினேன்.

**கேள்வி 5:-** பாடசாலை மட்டத்தில் நீங்கள் பெற்ற அடைவுகள் பற்றி கூறுங்கள்.

பதில் :- பாடசாலை, கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் நடாத்தப்படும் கட்டுரை, கவிதை, வினாவிடை, பேச்சு, போன்ற பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளேன். தரம் 9ல் விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் மாகாண மட்டத்தில் 3ம் இடத்தையும் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் பெற்றேன். 2012ல் தேசிய கலாசாரப் பேரவை நடத்திய இலக்கியப் பாடல் நயத்தற் போட்டியில் 1ம் இடத்தையும் பெற்றேன். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 7A 2B சித்திகளையும் பெற்றுள்ளேன். க.பொ.த உயர் தரத்தில் 3A சித்திகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் 4ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 54ம் இடத்தையும் பெற்றுள்ளேன்.

**கேள்வி 6** :- கற்பதற்கு கையாண்ட உத்திகள் பற்றிக் கூறுங்கள்.

பதில் :-கூடுதலாக பாடக்குறிப்புக்களை ப்ரெயில் எழுத்தில் எழுதிப் படித்தேன். மற்றும் இலக்கியப் பாடல்கள் கவிதைகள் என்பவற்றை ஒலிப்பதிவு செய்து கொண்டேன். அத்துடன் பெற்றோர் நண்பர்களது உதவியுடன் வாசித்தும் விடயங்களை அறிந்து கொண்டேன்.

**கேள்வி 7:-** உங்கள் வாழ்வியல் வளர்ச்சியில் பங்களித்தவர்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றி சொல்லுங்கள்

பதில் :- எனது வளர்ச்சியில் பங்களித்தவர்களாக எனது பெற்றோர்கள் மற்றும் நான்

கல்வி பயின்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றோரையும் அத்தோடு வாழ்வக அன்னை செல்வி சின்னத்தம்பி அன்னலக்சுமி அம்மையார் அவர்களையும் நான் பார்வைப் புல பாதிப்பை எய்திய வேளை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த செல்வி பா. மார்க்கண்டு அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அதேவேளை எனது கற்றல் செயற்பாடுகளுக்கு இணைப்புப் பாலமாக விளங்கிய வாழ்வகத்தினையும் (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்) நான் சிறப்புற நினைவு கூருகின்றேன். அதேவேளை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், யாழ் யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகள் எனது வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாய் இருந்திருக்கின்றன.

**கேள்வி 8** :-க.பொ.த உயர்தரத்தில் இவ்வாறான ஒரு சிறப்புப் பெறுபேற்றை பெற முடியும் என தாங்கள் நம்பினீர்களா?

பதில் :- பெறுபேற்றை பெறுவேன் என்பதில் எனக்கு இருந்த நம்பிக்கையை விட எனது தந்தையாருக்கே அதிகம் நப்பிக்கை இருந்தது என்று தான் சொல்லுவேன். யாராவது உனக்கு என்ன பெறுபேறு வரும் என்று கேட்டால் முந்திக் கொண்டு அவனுக்கு 3A சித்திகள் கிடைக்கும் என்று மிகுந்த நம்பிக்கையோடு எனது தந்தையார் சொல்லி இருக்கிறார்.

**கேள்வி 9** :- சிறந்த பெறுபேற்றை பெற்ற போது உங்களுக்கு ஏற்பட்ட மன நிலை பற்றிச் சொல்லுங்கள்.

பதில் :- மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன் ஆனால் மகிழ்ச்சியை விட எனது பெற்றோரிற்கும் எனது வளர்ச்சிக்காக உழைத்த சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பெருமையையும் தேடிக் கொடுத்த திருப்தி என்னுள் நிறைந்திருந்தது.

**கேள்வி 10** :- நீங்கள் வீட்டிலிருந்து கல்வி கற்றமைக்கு யாதேனும் சிறப்பான காரணங்கள் உண்டா?

பதில் :- பொதுவாக நான் விடுதி வாழ்க்கையை விரும்பியது இல்லை எனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகள் எனக்கு வழங்குகின்ற ஆதரவை நான் பெரும் முதலீடாக கருதுகின்றேன். குடும்ப ஆதரவு ஒருவரது வளர்ச்சியில் வழங்கக் கூடிய அதி உச்சமான பங்களிப்பின் நிதர்சனத்தை நான் கைக் கொண்ட வழிமுறை வெளிப்படுத்தி இருப்பதாக நான் கருதுகின்றேன். அது மட்டுமன்றி குடும்ப மட்டத்திலான சமூக இணைப்பே ஆரோக்கியமான சாத்தியப்பாடுகளை தேடித் தரும் என்பதனை நான் இப்போது அனுபவ ரீதியாகக் கண்டு கொண்டிருக்கின்றேன். எனது தனிப்பட்ட பார்வையில் நிறுவனங்களில் பிள்ளைகளை இணைக்கின்ற பெற்றோர்களில் சிலர் அத்தோடு தங்கள் கடமை முடிந்து விடுவதாக கருதுகின்றார்கள். அவ்வாறு எண்ணாமல்

நிறுவனங்களில் உதவியைப் பெறுகின்ற அதே வேளை பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளின் நலனில் கூடிய கவனம் செலுத்துகின்ற போதே பிள்ளைகளின் வளர்ச்சியில் உச்சமான நிலையினை நாம் காணலாம்.

**கேள்வி 12** -பாடசாலைகளில் தற்போது கற்றுக் கொண்டிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு தாங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்.

பதில் :- பாடசாலையில் கிடைக்கக் கூடிய வளங்களை உச்சமாக பயன்படுத்துங்கள். கற்பதற்கு அதிக நேரத்தை செலவிடுங்கள் இவ்வாறு செய்யும் போது உச்சமான பயனை நீங்கள் பெறுவீர்கள்.

**கேள்வி 12** : - தாங்கள் சமூகத்துக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில் :-மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்பதை சமூகம் புரிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கும் அதே வேளை மாற்றுத்திறனாளிகளை இனங் கண்டு அவர்களின் தேவைகளை பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

**கேள்வி 13** : - உங்களது எதிர்கால இலட்சியம் பற்றி சொல்ல முடியுமா?

பதில் :-நான் சட்டத்துறையில் பயில விரும்புகிறேன். எனது கல்வியின் ஊடாக சமூக நீதிக்காகப் பங்களிப்பதை நான் எனது நோக்காக கொண்டிருக்கின்றேன்.

நன்றி சொர்ணலிங்கம் தருமதன் உங்கள் இலட்சியம் ஈடேற வலுவின் பிரார்த்தனைகளும் என்றும் உடன் இருக்கும். நேர்காணலின் ஆரம்பத்தில் எனக்கு இருந்த ஆச்சரியம் மெல்ல விடைபெற்றுக் கொள்கிறது. பூக்கள் மலரும் போது அதன் சத்தத்தை எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை தானே.

நன்றி

வலுவின் முற்றத்து மல்லிகை பகுதிக்காய்

**திரு நா.கீதாகிருஸ்ணன்**

கல்வியே வாழ்வின் அனைத்துக் குழப்பங்களுக்கும் தீர்வு தரவல்லது

சிறுகதை

# காலம் வந்தால் வாழ்வு வரும்

அரவிந்தனுக்கு இரவு முழுவதும் சரியாக தூங்கமுடியவில்லை. அடுத்தநாள் எப்போது விடியும் என்ற எண்ணமே அவன் உள்ளம் முழுவதும் நிறைந்திருந்தது. அவனை தூங்கவிடாமல் அது குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தது.

அடுத்தநாள் விசயம் அவனுடைய வாழ்க்கையில் அவன் அடைந்திருக்கும் ஒருமைல் கல் என்று சொல்லமுடியும். அரவிந்தனுக்கு அப்படி ஒன்றும் வயதாகி விடவில்லை. போன மாதம் தான் 28வது பிறந்தநாளை கொண்டாடி இருக்கிறான். நண்பர்களைத் திருப்திப்படுத்துவதற்காக நடந்த பிறந்தநாள் கொணடாட்டமே அன்றி அவன் மனதார மகிழ்ச்சி அடையவில்லை.

அவன் பல்கலைக் கழகத்திலிருந்து கலைப் பட்டதாரியாக வெளியேறி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வெட்டியாக காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான். அப்படி வீண் காலம் விடுவது அவனுக்கு சம்மதம் இல்லை இருந்தாலும், அவனுடைய உடல் தகுதியின்மையும், அதன் விளைவாக அவனுடைய மனதில் வலிந்து திணிக்கப்பட்ட சில சங்கதிகளும் அவனுக்கு சங்கடத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது. சே........ என்ன மனிதர், என்ன வாழ்க்கை என்று அவனை அலுத்துக் கொள்ளவும் வைத்திருக்கிறது அரவிந்தன் கண்பார்வையில்லாமல் பிறந்தவன். அது என்னமோ தெரியவில்லை, குறைபாடு உள்ள



பிள்ளைகள் ஏழைகளின் வீட்டில் தான் பிறக்கிறார்கள் குறைபாடு உள்ள பணக்காரர்கள் பெரும்பாலும் குறைகளை வில்லங்கமாக விலைகொடுத்து வாங்கியவர்களாகவே இருக்கிறார்கள். அரவிந்தன் பிறந்த பின்னர் கண்தெரியாத குழந்தை என்று அவனைப்பெற்ற அம்மா அழுது புலம்பவில்லை. அப்பாவும் கூட அப்படித்தான். ஆம்பிளைப்பிள்ளை தானே, அவன் எப்படியும் பிழைத்துக்கொள்வான் என்று ஆறுதல் பட்டுக்கொண்டனர்.

அரவிந்தனுக்கு ஒரு அக்கா

இருந்தாள். அவனுக்குப் பின்னால் ஒரு தம்பியும் பிறந்தான். அக்காவோடும் தம்பியோடும் சேர்ந்து விளையாடி மகிழ்வான் . பிள்ளைகள் வளர்ந்து கொண்டிருந்தார்கள் அக்கா பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கப்போனாள். தொடர்ந்து தம்பியும் பாலர் பாடசாலையில் சேர்ந்தாயிற்று. இப்போது அரவிந்தனுக்கு தனிமை துன்பத்தைக் கொடுக்கத் தொடங்கி விட்டது.

அப்பா வேலைக்குப் போய்விடுவார். சமையல் கட்டில் இருக்கும் அம்மாவை அரவிந்தன் படாத பாடுபடுத்துவான் அவனுடைய எல்லாக் கூத்துக்கும் தாளம் போட்டுக்கொண்டே அம்மா தனது வேலைகளையும் செய்து முடிப்பாள். இரவில் அக்கா படிக்கும் போது பக்கத்திலிருந்து கவனமாக கேட்பான். அவளுடைய பாடங்கள் அனைத்தும் அவனுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன. தனது பிள்ளைகளின் சுட்டித்தனமும் அம்மாவிற்கு பெருமையாக இருந்தது.

அரவிந்தனுடைய அக்காவின் பாடசாலையில் தமிழ் விழா நடந்தது. மூன்று பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு அம்மா போனாள். அங்குள்ள ஆசிரியர்கள் அரவிந்தனை அனுதாபத்துடன் பார்த்தார்கள் அவனுடைய கெட்டித்தனத்தை அந்த ஆசிரியர்களிடம் சொல்லிக்காட்டிக் கொண்டிருந்தான். அப்போது அந்தப்பக்கமாக பாடசாலை அதிபர் வந்தார்.

அதிபருடைய பார்வை அரவிந்தன் மேல் விழுந்தது. அம்மாவிடம் அவனைப்பற்றி விசாரித்து அறிந்தார். இந்தப்பிள்ளை கெட்டிக்காரன் எதிர்காலத்தில் பெரிய ஆளாக வருவான் இவனை நல்லாய்படிப்பியுங்கோ" என்றார் அவர். அதைக்கேட்டு அம்மா அழாக்குறையாக சிரித்தாள். கண்தெரியாத பிள்ளையை எப்படி படிப்பிப்பது என்று கேட்டாள். அவளுடைய அப்பாவித்தனமான கேள்வியை அதிபர் புரிந்து கொண்டார். அடுத்தநாள் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லிவிட்டு அதிபர் போய்விட்டார்.

அரவிந்தனை கூட்டிக்கொண்டு அம்மாவும் அப்பாவும் அடுத்தநாள் பள்ளிக்கூடம் வந்தார்கள். பார்வை இல்லாத மாணவர்களுக்கு கல்வி ஊட்டப்படுவதைப் பற்றி அதிபர் அவர்களுக்கு விளங்கப்படுத்தினார். ஆரம்பக்கல்வியை இப்படியான குழந்தைகள் கற்கின்ற பாடசாலையில் போதிப்பார்கள் பின்னர் சாதாரண குழந்தைகள் படிக்கின்ற ஒருபாடசாலைக்கு அனுப்பிவிடுவார்கள். எல்லோரையும் போலவே இவனும் படிப்பான் அதற்காக விசேட உதவிகளும் செய்து கொடுப்பார்கள்

அரவிந்தனின் பெற்றோர்கள் இத்தனை சங்கதிகளையும் புரிந்துகொள்ளும் அளவிற்குப் படிப்பறிவு உடையவராய் இல்லை தமது பிள்ளையைச் சேர்த்து படிப்பிப்பதற்கும் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்துகொண்டார்கள். அதிபர் கொடுத்த தகவலின்படி அந்தப்பாடசாலையை தேடிக் கண்டு பிடித்தார்கள். அரவிந்தனை அங்கு சேர்த்தாயிற்று பிள்ளையை விடுதியில் தங்க வைக்க வேண்டுமென்பது அம்மாவிற்கு சங்கடமாய் இருந்தது. இடையிடையே வந்து பார்க்கவும், விடுமுறைகாலத்தில் வீட்டிற்கு அழைத்துச் செல்லவும் முடியும் என்பதால் தன்னை தேற்றிக் கொண்டாள். பிள்ளை படிக்கவேண்டும் என்றால் எல்லாவற்றையும் ஏற்கத்தான் வேண்டும் என்று அப்பா சமாதானம் கூறினார் , அரவிந்தன் நன்றாகப்படித்தான் ஆரம்பக் கல்வியை முடிக்கும் போது புலமைப்பரிசில்

பரீட்சையிலும் வெற்றிகண்டு எல்லோரையும் மூக்கில் விரலைவைக்கச்செய்தான். கல்வியைத்தொடர பெரிய பாடசாலை ஒன்றில் அவனைச் சேர்த்தார்கள். ஆரம்பத்தில் சிலமாணவர்கள் அவனைக் கிண்டல் செய்தார்கள் அரவிந்தன் தனது இனிய சுபாவத்தால் அவர்களையும் நண்பர்களாக்கிகொண்டான்.

இப்போது நிலமை மாறிவிட்டது அரவிந்தனுக்கு உதவி செய்வதற்கு நண்பர்கள் விரும்பி முன்வந்தார்கள் பாடப்புத்தகம் குறிப்புகள் முதலியவற்றை வாசித்துக் காட்டினார்கள். ஒலிப்பதிவு கருவியில் பதிவு செய்து கொடுத்தார்கள். அவனுக்கு இயலுமான பாடசாலையில் நடக்கின்ற போட்டிகளில் பங்குபெறச் செய்து வெற்றி பெற உதவினார்கள். நல்லாசிரியர்களும் அவனுக்கு மாணவர்களோடு சேர்ந்து உதவி செய்தார்கள். இதற்கிடையில் பார்யைற்றவர்களின் நலன்களைக் கவனிக்கும் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அரவிந்தனைப்பற்றி அறிந்துகொண்டு அவனுக்கு உதவ முன்வந்தார்கள் எல்லோருடைய உதவிகளும் வாழ்த்துக்களும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் அனுக்கிரகமும் அவனை ஊக்கமாக படிக்க வைத்தது. அரவிந்தனின் அயராத முயற்சி எதிரே தலைகாட்டுகின்ற ஒவ்வொரு தடைக்கற்களையும் படிக்கற்களாக்கிக் கொண்டு அவனை அழைத்துச் சென்றது. சாதாரணதரப்பரீட்சையில் விசேட சித்திகளுடன் வெற்றி கண்டு கடந்து சென்றான். உயர்தரத்திலும் தேறி பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு மாணவன் ஆனான். கல்வியும் ஒழுக்கமும் மாணவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புத்தரும். பல்கலைக்கழகத்தில் அவனுக்கு உதவுவதற்கு நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். பல்கலைக்கழகத்தில் தான் இவனுக்கு கவிதாவின் நட்புக்கிடைத்தது. உதவி என்று அரும்பாகி நட்பென்ற மொட்டாகி காலப்போக்கில் காதலாக மலர்ந்தது. கவிதா ஒரு பணக்கார வீட்டுப்பெண் அவள் ஒரே பிள்ளை என்பதால் வீட்டில் அவளுடைய பேச்சை யாரும் மறுத்துப் பேசுவதில்லை.

அரவிந்தன் கவிதாவோடு கதைப்பது பற்றிய தகவல் அவளுடைய வீட்டிற்கு தகாத செய்தியாகத்தான் போய்ச் சேர்ந்தது. அது பல இணையப்பக்கங்களில் பதிவாகும் அளவிற்கு நீட்டி விசாரிக்கப்பட்டது. என்னதான் மகளின் பாட்டுக் கெல்லாம் தலையாட்டினாலும் கண் பார்வையில்லாத ஒருவனுக்கு அவளை கொடுத்து தலையாட்ட முடியாமல் தவித்தார்கள். முள்ளில் விழுந்த சேலையை மெல்ல மெல்ல எடுப்பது எப்படி என்று அவர்களுக்கு தெரியவில்லை. "ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்" தீராத இந்த விவகாரங்களையும் காலம் தீர்த்து வைக்கும். அரவிந்தன் படித்து முடித்து வேலைக்குப் போகட்டும் சுயமாக சம்பாதித்து தன்னுடைய சொந்தக்காலில் நிற்கட்டும் அதன் பிறகு பார்க்கலாம் என்று கவிதாவின் அப்பா உறுதியாக கூறிவிட்டார்.


இந்தத் தகவல் அரவிந்தனுடைய ரோசத்தை கிளறி விட்டது. அவன் இரவு பகல் பாராமல் படித்தான் கல்வியே கருந்தனம் ஆகிவிட கவிதாவும் கல்யாணமும் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டன. பல்கலைக்கழகத்திலிருந்து சிறப்புத் தேர்வுடன் வெளியே வந்தான். அரவிந்தனின் அம்மாவிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அப்பா வானத்திற்கும் பூமிக்குமாய் எகிறிக்குதித்தார். அவனுடைய அக்காவிற்கும் ஆசிரியர் வேலை கிடைத்துவிட்டது. இவ்வளவு காலமும் பட்ட துன்பம் எல்லாவற்றிற்கும் கடவுள்

கண்ணை திறந்து விட்டார் என இறைவனுக்கு நன்றி கூறினார். அரவிந்தன் எங்கே படிப்பை முடிக்கப் போகின்றான் எனநினைத்த கவிதாவின் அப்பாவிற்கும் அவனுடை வெற்றி அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்தது. இருந்தாலும் கண் தெரியாதவன் இந்தப் பட்டத்தை வைத்துக்கொண்டு என்ன வேலை வாங்க முடியும்? பேருக்கு பின்னால் எழுத மட்டும்தான் பயன்படப் போகிறது என்று அலட்சியமாக சொல்லி விட்டார். ஆனால் கவிதா அரவிந்தனுக்கு வேலை கிடைக்கும் என்பதில் உறுதியாக இருந்தாள். கணனியை அநாயாசமாக அவன் உபயோகிப்பதை அவள் பார்த்து ஆச்சரியப்பட்டு இருக்கிறாள். கைபேசியின் நுட்பங்களையும், அவன் சாதுரியமாக கையாளுவான் அவனுக்கு வேலை கிடைக்கும்வரை வீட்டுக்காரரை தாக்காட்டுவதுதான் கவிதாவிற்கு பெரும்பாடாகி விட்டது.

ஒருவருடம் ஆயிற்று. கவிதாவிற்கு பல மாப்பிளைகள் பார்த்தார்கள் பொருத்தமாக வருவதை எல்லாம் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தாள். இன்னும் ஆறுமாதத்திற்குள் அரவிந்தன் வேலையில் சேர்ந்துவிட வேண்டும். அது நடக்காது போனால் அவனை மறந்துவிடவேண்டும் என்று கவிதாவின் அப்பா கண்டிப்பாக சொல்லிவிட்டார். கவிதாவும் நேர்த்தி வைக்காத கோயில்களே கிடையாது. அரவிந்தனும் எழுதிப் போடாத விண்ணப்பங்களே கிடையாது. அனேகமான இடங்களில் அவனது பட்டத்திற்கு கிடைத்தமரியாதையை அவனுடைய குறைபாடு குழப்பியடித்தது. வேலைகொடுப்பவர்கள் கண் தெரியாதவரை வைத்து எப்படி வேலைவாங்குவது என்ற அறிவு இல்லாதவராய் இருக்கிறார்கள். எவ்வளவுதான் ஊடகங்கள் எடுத்துச் சொன்னாலும் எல்லாம் எருமை மாட்டில் பெய்த மழை போல வீணாகியே போகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது. உன்னுடைய இலக்கில் குறியாக இருந்தால் அது கைகூடுவது உறுதி அரவிந்தனின் உறுதியான உள்ளத்திற்கு இன்று வெற்றிநாள் .

தோற்றுக் கொண்டிருந்த அணிக்காக கடைசி ஓவருக்கு மட்டை வீச வந்தவர் சிக்சர் அடித்து வெற்றி இலக்கை தாண்டினால் எப்படி துள்ளிக்குதிப்பானோ அப்படியான மனமகிழ்ச்சியில் அரவிந்தன் இருந்தான் அலுவலகத்திற்கு புறப்படத் தயாராகிவிட்டான். அக்கா அவன் கொண்டு போகவேண்டிய கடிதங்களையும் கோப்புக்களையும் தயாராக எடுத்துக்கொடுத்தாள். அம்மாவிடமும் அப்பாவிடமும் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு அலுவலகத்திற்கு புறப்பட்டான். அக்கா மோட்டார் சைக்கிளில் அவனை ஏற்றிக்கொண்டு புறப்பட்டாள். பெற்றோர் வைத்த கண் வாங்காமல் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். அக்காவின் இடத்தில் கவிதா இருந்து அரவிந்தனை அலுவலகத்திற்கு ஏற்றி கொண்டு செல்லும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

நாவற்குழி S. சிவராசா




**01. சுயதொழில் பயிற்சி**

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையம் கழிவு பொருட்களைப் பயன்படுத்தி மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 15-07-2013 மற்றும் 25-07-2013 ஆகிய திகதிகளில் வாழை இலையில் தட்டு செய்தல். வாழை நாரில் பொம்மை கைப் பைகள் (Hand bag) செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்கி இருந்தது. இப் பயிற்சி நெறியில் 40வரையான மாற்றுத்திறனாளிகள் கலந்து பயன் பெற்றனர்.

**02. வெள்ளைப்பிரம்பு தினம்**

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாண கிளை வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு ஒன்றினை கடந்த 17-10-2013 அன்று காரைநகர் பிரதேச செயலக மண்டபத்தில் நடாத்தி இருந்தது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் திருமதி நந்தினி பாபு அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வில் காரைநகர், சங்கானை, சன்டிலிப்பாய், ஊர்காவற்துறை, வேலணை, உடுவில் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த கிளை அங்கத்தவர்கள் 30 பேர் வரை கலந்து கொண்டனர். இவர்களுக்கு வெள்ளைப்பிரம்புகளும் அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன.

**03. பட்டி மன்றம்**

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையம் பட்டி மன்ற குழு ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துள்ளது. இக் குழுவினரின் முதலாவது ஆற்றுகை கடந்த 04-08-2013 இரவு காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய சப்பற திருவிழா அன்று நடைபெற்றது. இப் பட்டி மன்ற குழுவானது மாற்றுத்திறனாளிகளின் முழுமையான பங்களிப்புடன் இயங்கி வருகிறது

என்பது குறிப்பிடத்தக்கது. சமூக பயன்பாடு உள்ள கருப்பொருட்களை உள்ளீர்த்தவாறு ஆலய விழாக்களிலும் ஏனைய கலாச்சார விழாக்களிலும் பட்டிமன்ற ஆற்றுகைகளை முன் எடுப்பதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தை வளம்படுத்தும் பணிகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என கருவி பட்டிமன்ற குழுவின் இயக்குனர் யோகலிங்கம் சுதாகரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

**04. விசேட தேவைக்குட்பட்டோருக்கான பணிகள்**

வாழ்வகம் விசேட தேவையுடையோருக்கான அமைப்பு வண்முனை மேற்கு வவுணதீவுப் பகுதியில் கடந்த ஏழு வருடங்களாக இயங்கி வருகின்றது. இந்த அமைப்பில் 519 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளதாகவும், இவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தங்களிடமுள்ள நிதி இயலுமைக்கு அமைவாக சுய தொழில் மற்றும், வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதன் தலைவர் சோமசுந்தரம் புவிராஜ சிங்கம் தெரிவித்துள்ளார்.

**05. புலமைப் பரிசில் பரீட்சை**

கடந்த 2013 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இருந்து தோற்றிய பார்வைக் குறைபாடுடைய மாணவனாகிய செல்வன் சந்திரகுமர் அமலசாம் என்பவர் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

**06. நிறுவுனர் நினைவு நாள்**

வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்ல நிறுவுனர் நினைவு நாள் நிகழ்வு கடந்த 11.09.2013 (புதன் கிழமை) அன்று தலைவர் திரு ஆ.ரவீந்திரன் தலைமையில் வாழ்வகத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்தியகலாநிதி திரு.ஆ. கேதீஸ்வரன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம்) அவர்களும் சிறப்பு அதிதிகளாக திருமதி ரதி நகுலேஸ்வன் (பிரதித்திட்டப் பணிப்பாளர் பிரதேச செயலகம் உடுவில்), திரு நி. முருகானந்தன் (விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்,வலிகாமம் கல்வி வலயம்), திரு ஆ.கிருபாகரன் (அத்தியட்சகர்,அரச முதியோர் இல்லம் கைதடி), திரு ச. ஜெனார்த்தனன் (பதவி நிலை உத்தியோகத்தர்,பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலம் யாழ்ப்பாணம்), திரு க.சிவனேசன் (கணேசன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), திரு H.L.துஷ்மந்த (பொறுப்பதிகாரி சுன்னாகம் பொலிஸ் நிலையம்) போன்றோரும், கௌரவ அதிதியாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர் ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானம் தெல்லிப்பழை) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் நினைவுப் பேருரையினை யாழ் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மு.மலரவன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார்.

இன்று வெள்ளிவிழா காணும் வாழ்வகம் அமரர் செல்வி சின்னத்தம்பி அன்னலக்சுமி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இவரது நினைவு நாளே ஆண்டு தோறும் நிறுவுனர் நினைவு நாளாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வலுவிடம் கேளுங்கள்...!

**தெய்வேந்திரம் காரைநகர்**

**கேள்வி** :- மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளிற்காக ரூபா 3000 பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்கப்பட்டு வருவதாக அறிகின்றேன் நான் ஒரு ஊனமுற்றவர் ஆதலால் இக் கொடுப்பனவை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்.

**பதில்** :- தாங்கள் வதிகின்ற காரைநகர் பிரதேச செயலகத்திற்கு சென்று சமூக சேவைப் பகுதியில் பணி புரியும் சமூக சேவை உத்தியோகத்தரிடமிருந்து மகிந்த சிந்தனைக் கொடுப்பனவிற்கான படிவத்தை முதலில் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் அறிவுறுத்தலுக்கு அமைய படிவத்தை பூர்த்தி செய்து சமூக சேவைக் கிளையில் வழங்குவீர்களாயின் புள்ளிகளின் அடிப்படையில் கால ஓட்டத்தில் இக் கொடுப்பனவைப் பெறும் வாய்ப்பினை நீங்களும் பெறுவீர்கள்.

**தர்சன் இருபாலை**

**கேள்வி** :- எனது பாடசாலையில் கல்வி பயிலும் நண்பர் ஒருவர் பார்வைப் பிரச்சினை உடையவர் இவர் கற்றலின் போது இடர் படுகின்றார். இவருக்கு எவ்வாறு உதவி வழங்க முடியும்?

**பதில்** :- தர்சன் தாங்கள் நண்பர் மீது கொண்டிருக்கின்ற அக்கறைக்கு வலு தலை வணங்குகின்றது. தங்கள் சமூக அக்கறையின் வெளிப்பாடாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம். குறித்த நண்பரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவரது பெற்றோர்களோடு நீங்களோ பாடசாலை ஆசிரியரோ அல்லது அதிபரோ கதைத்து இதற்கு ஏற்பாடு செய்யலாம். வைத்திய பரிசோதனை ஊடாக பெறப்படுகின்ற முடிவையும் ஆசிரியர் குறித்த நண்பர் தொடர்பாக தருகின்ற தகவல்களையும் வைத்துக் கொண்டு அவரது கற்றல் இடர்பாட்டிற்கான தீர்வை நாம் காண முடியும். பார்வை தொடர்பாக வைத்திய ஆலோசனை பெறுவதின் அவசியத்தையும் அவசரத்தையும் உங்கள் நண்பருக்கு நீங்கள் உணர்த்துங்கள் இது நல்ல பலனைத் தரும்.

**ரஞ்சினி கொடிகாமம்**

**கேள்வி** :- எனது உறவினர் ஒருவர் மிதிவெடியில் ஒரு காலை இழந்துள்ளார். இவருக்கு செயற்கைக் கால் பொருத்துவதற்கு உதவிகளை பெற்றுக் கொள்ளும் வழிகள் பற்றி அறியத்தர முடியுமா?

**பதில்** :- ரஞ்சினி செயற்கைக் காலினை முற்றிலும் இலவசமாக நீங்கள் அவருக்கு பெற்றுக் கொடுக்க முடியும். பிரதேச செயலகங்களில் இயங்குகின்ற சமூக சேவைக் கிளைக்குச் சென்று விசேட உபகரணங்களைப் பெறும் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் சமூக சேவை உத்தியோகத்தரிடம் கையளித்தால் அவர் செயற்கைக் காலினை இலவசமாக பொருத்துவதற்கான

வழிமுறைகளை ஏற்படுத்தி தருவார்.

**திலீபன் சாவகச்சேரி**

**கேள்வி** :- எனது நண்பர் ஒருவர் கேட்டல் குறைபாடு உடையவர். இவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றார். இவருக்கு கேட்டல் திறனை அதிகரிப்பதற்கான கருவியை இலவசமாக பெற்றுக் கொள்ள எவ்வாறான நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்?

**பதில்** :- திலீபன் 3 வது வினாவிற்காக வழங்கப்பட்டிருக்கின்ற தகவல்களை அடியொற்றி செயற்படுவீர்களே ஆனால் முற்றிலும் இலவசமான வகையில் தங்கள் நண்பருக்கு காது கேட்கும் கருவியை பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவைக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**குமார் பருத்தித்துறை**

**கேள்வி** :- எனது நண்பரின் குழந்தைக்கு ஐந்து வயது, ஆனால் அக் குழந்தை கதைக்கும் போது இடர்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய என்ன செய்யலாம்?

**பதில்** :- குமார் முதற்கட்டமாக இக் குழந்தையை விசேட வைத்திய நிபுணர் ஒருவரிடம் அழைத்துச் செல்லுங்கள் அல்லது அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று அங்கிருக்கும் வைத்தியரின் உதவியோடு பொருத்தமான வைத்திய நிபுணரிடம் குழந்தையை அழைத்துச் செல்ல முடியும். பேச்சுத் திறன் குன்றிய தன்மை நிரந்தரமானதென காணப்படுமிடத்து அப் பிள்ளை படிப்பதற்கான வாய்ப்புக்களை இவ்வாறானவர்களுக்காக கல்வி வழங்கிக் கொண்டிருக்கின்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். குறைபாட்டின் தன்மையை ஆராய்ந்த பின்னர் பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். அப்பிள்ளையின் விருத்தியை மேம்படுத்துவது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் வலுவிடம் கேளுங்கள்.

**நீங்கள் உங்கள் ஊரிலோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களின் இல்லங்களிலோ மாற்றுத்திறனாளிகளைக்கண்டிருப்பீர்கள். அவ்வேளை அவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என சிந்தித்திருப்பீர்கள் அல்லது அவர்களின் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என எண்ணி இருப்பீர்கள் இவ்வாறாக தாங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு விடைகளை பெற்றுத்தரும் களமாக வலுவிடம் கேளுங்கள் எனும் இப்பகுதி அமைகின்றது. எனவே, மாற்றுத்தினாளிகள் தொடர்பாக தங்கள் மனதில் தோன்றும் கேள்விகளை எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**"வலுவிடம் கேளுங்கள்"**

**வலு**

**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவளநிலையம்.**

**இல 90 செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்**



மீண்டும் புதுப்பொலிவுடன்
யாழ் மண்ணில்
நியூ
Nadarasa Kajanthan
மைதிலி ஜுவலர்ஸ்
தங்க நகை உலகில் தடம் பதித்த நியூ மைதிலி ஜ்வலர்ஸ் கொழும்பில் இருந்து மீண்டும் யாழ் மண்ணில்
புதுப்பொலிவுடன் இல. 38,40, கஸ்தூரியார் வீதியில் இயங்குகின்றது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
மங்கையர் மனங்கவரும் அசல் தங்க நகைகள்
உடனுக்குடன் சிங்கப்பூரில் இருந்து பெற்று தரப்படும்.
ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
தங்க நகை உலகில் மங்கா புகழ் படைத்த
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
NEW MAITHILY JEWELLERS
No 38, 40, Kasthuriyar Road,
Jaffna
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 7878, 021 221 7877



கரங்களில் கருவிகள் கருத்துடன் புதுமைகள்
கலங்கரை விளக்கென விடிந்திடும் பொழுதுகள்
மானுடம் வென்றிட மாதவம் செய்தவர்
மேதினி மீதினில் மிடுக்குடன் வாழ்கவே

## கருவி உளவள மேம்பாட்டு நிறுவனம்

தேவி Printers
#140/1 MANIPAY ROAD JAFFNA